செங்குந்தர்

குலமும் வாழ்வும்

வடார்க்காடு மாவட்ட செங்குந்தர் சங்கம்

திருப்பத்தூர். வ.ஆ.

ஆசிரியர் :

புலவர் செ. சோமசுந்தரம், எம். ஏ., பி. எட்.,

குடியேற்றம், வ. ஆ.

பெரியவர் கா. அ. ச. அவர்கள்

நூற்றாண்டு வெளியீடு

அன்புடன் : D. ஷண்முகம்,
இந்துஸ்தான் லுங்கி கம்பெனி (பாகீஜா), குடியேற்றம்.

முதற்பதிப்பு : 1987

வடார்க்காடு மாவட்ட
செங்குந்தர் சங்கம்,
5. பெரியவர் சண்முகனார் தெரு,
திருப்பத்தூர், வ. ஆ. 635 601.

அச்சிட்டோர் :
பாரி அச்சகம், தருமபுரி - 1 போன் 6618

ஸ்ரீ ராமஜெயம்

பெரியவர் - பெருங்கவிஞர் - பேரறிஞர்

திருப்பத்தூர் கா. அ. சண்முகனாரின்

நூற்றாண்டு விழாவில்



" தனக்குவமையில்லாதான் "

நெஞ்சார்ந்த நன்றியோடு வெளியிடும்

அன்புக் காணிக்கை

பொருளடக்கம்

வ. எண்		பக்கம்
	அணிந்துரை	
	என்னுரை	
	வேண்டுகோள்	
1.	நலம் தரும் நமது குலம்	1
2.	வீரவாகு தேவரின் வீரம்	5
3.	முசுமுகன் முசுகுந்தனுன்	8
4.	நவ வீரர்களும் முசுகுந்தனும்	10
5.	செங்குந்தர் ஆட்சி	13
6.	குலப் பெயர்களும் தொழில் தொன்மையும்	17
7.	கொடி காட்டும் கொள்கைகள்	22
8.	குலச் சான்ருேர்களில் சிலர்	25
9.	தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்	36

உ
முருகா

கிருபானந்தவாரி
107, சிங்கண்ண செட்டி தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை - 600 002

தொலைபேசி 565666

முகாம் : வேலூர்
10—3—87

வேலை வணங்குவதே வேலை

அணிந்துரை

குன்றுகளில் சிறந்தது இமயம்; நதிகளில் சிறந்தது கங்கை; மலர்களில் சிறந்தது தாமரை. அதுபோல் ஆயுதங்களில் சிறந்தது குந்தம். அது செம்மைப் பண்பை உடையது. செங்குந்தம் என்ற தருமப் படையைத் தாங்கி உலகுக்கு நலம் புரிந்தவர்கள் செங்குந்தர்கள்.

“ நந்தா விளக்கை நிகர்குலத் தோருமெந் நாளும்நம்பி
வந்தாரை வாழ்விக்கும் வல்லபத் தோரும் வறுமைதவிர்த்து
இந்தா பிடியெனக் கையேற்ப தற்குமுன் ஈந்தருளும்
சிந்தா மணியொத்த கைத்தலத் தோருமிச் செங்குந்தரே ”

—செங்குந்தர் பிரபந்தத் திரட்டு

இது வீரவாகு தேவரின் சந்ததியாக வந்தது. இக்குலத்தில் பழம்பெரும் புலவர்களும், அள்ளி வழங்கிய வள்ளல்களும் வாழ்ந்தார்கள்.

செங்குந்தர் குலத்தில் தோன்றிய பெருந்தகை திருப்பத்தூர் கா. அ. சண்முகனார் அவர்கள். அள்ளிக் கொடுப்பதற்கும், ஆலயம் புதுப்பிப்பதற்கும் உள்ளலுத்துப் போகாத உதார குணமிக்கவர். இவர் கருமாலைப் போக்கும் திருமாலைப் போற்றி எழுதிய நூற்கள் பலப்பல. இத்தகு வித்தக மிக்கவருக்கு நூற்றாண்டு விழா எடுப்பது போற்றத் தக்கது.

குடியாத்தத்தில் செங்குந்தர் குலவிளக்காய்த் தோன்றியவர் ஆ. செங்கல்வராய முதலியார் ஆவார். இவர் தருக்க நூலில் வல்லவர். இவர் நுண்ணிய மதிநலம் படைத்த புண்ணிய சீலர்.

இவருடைய தவப் புதல்வர் புலவர் செ. சோமசுந்தரம் அவர்கள் நம் அன்புக்குரியவர்; அடக்கமே வடிவானவர். இவர் செங்குந்தர் குலமும் வாழ்வும் என்னும் நூலை எழுதி சண்முகனுரின் நூற்ருண்டின் நினைவு மலராக வெளியிடுகின்ருர்.

நூல் அழகாக அமைந்துள்ளது; நமது செங்குந்த குலத்தில் தோன்றிச் செந்தமிழை வளம் புரிந்த புலவர் பெருமக்கள் பலரை இதில் எழுதியுள்ளார்.

இதனை அனைவரும் படித்து மகிழ்க. வாழ்க.

நேரிசை வெண்பா

குணமார்செங் குந்தர் குலமும்நல் வாழ்வும்
உணர்வுடையோர் போற்ற உரைத்தான் — மணமாரும்
சீர்சோம சுந்தரவேள் தெய்வத் திருவருளால்
பார்தனிலே வாழ்க பணைத்து.

அன்பன்,
கிருபானந்தவாரி.

என்னுரை

வடார்க்காடு மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் பெருந்திரு பெரியவர்-**கா. அ. ச. பத்மனாப முதலியார்** அவர்கள் நமது குலவரலாற்றினை நம்மவர் அறிந்து கொள்ளும் வண்ணம் சிறு வெளியீடாக வெளியிடுதல் வேண்டும் என்று ஓராண்டிற்கு முன்னரே என்னிடம் சொல்லி — அதற்கான நூல்களையும் கொடுத்தருளினார்.

அப்பெரியாரது எண்ணம் உரிய நேரத்தில் உருப்பெற்றது கண்டு **முருகப் பெருமானை** முப்போதும் வணங்குவதோடு **திருமுருக வாரியார் சுவாமிகளின்** திருவடிகளுக்கும் எனது வணக்கத்தைப் படைத்து, அணிந்துரையருளிய அவர்தம் அன்னை உளத்துக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

குடியேற்றத்தில் திரு. **பு. கா. கங்காதர முதலியார்,** திரு. **வெ. முனுசாமி முதலியார்,** என் தந்தை தருக்க வேதாந்த போதகாசிரியர் **காஞ்சி ஆ. செங்கல்வராய முதலியார்** முதலியவர்களுடன் இணைந்து **வேதாந்தத் தமிழ் வாசகசாலை** என்ற கல்வி சமய அறநிலையத்தைத் தோற்றுவித்து, அதன் நிறுவன உறுப்பினராயிருந்து திருமகள் கல்விச் செல்வத்தையும் ஏற்படுத்தி மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கெல்லாம் ஆண்டுதோறும் பீரோக்கள் அன்பளிப்பாக வழங்க வழிவகை செய்து பெருஞ்சேவை புரிந்தவரும், என்னோடு இறுதிவரை பாசத்தோடு பழகிய பெருந்தகையாளருமாகிய **பெரியவர் கா. அ. சண்முக முதலியார்** அவர்களின் நூற்றாண்டு விழா நினைவு வெளியீடாக இந்நூலை வெளியிடுவதில் நான் பெருமைப்படுகின்றேன்; பெரும் பேருகக் கருதுகின்றேன்.

இன்னும், அவ்வறப்பணிகளின் தற்போதைய தலைவர் **வெ. மு. வாசுதேவ முதலியார்,** செயலர் **பு. க. சிவஞானம்** மற்றுமுள்ள நிர்வாக உறுப்பினர்கள்

ஆகியவர்களுக்கும் இந்நூலின் இறுதித் தாளிற்கு விளம்பரம் கொடுத்துதவிய குடியேற்றம் திருமகள் நூற்பாலை நிர்வாக இயக்குநர்கள் மேதகு M. எதிராசனார் மேதகு V. R. வெங்கடாசலம் ஆகியவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொன்னுக்குப் பொட்டிட்டுப் பார்ப்பதுபோல், இப் புத்தகத்துக்கு மேலும் பொலிவூட்டுவது வழித்துணை வந்திடும் திருத்தணி முருகனின் திருவுருவப் படமே. அதனைப் பெறப் பெரிதும் துணை நின்றவர் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைப் பொதுச் செயலாளர் சென்னை திரு. M. M. தணிகைமலை அவர்கள். உதவிய அவ்வுள்ளத்துக்கு ஒருகோடி வணக்கமும் நன்றியும்.

இத்துறையில் ஆர்வமூட்டிய குடியேற்றம் திரு. K. T. மார்க்கபந்து முதலியார் அவர்கள், வடார்க்காடு மாவட்டச் செயலர்கள் திரு. S. R. நடராஜன், திரு. M. தண்டபாணி, கொரட்டி திரு. K. G. இராமசாமி, குடியேற்றம் சங்கத் தலைவர் திரு. M.M. சிவஞானம் முதலியவர்களை நினைவு கூர்தலோடு,

இந்நூலினை அச்சிட்டுதவிய தருமபுரி பாரி அச்சக உரிமையாளர் திரு. V. குப்புசாமி அவர்களுக்கும் பிழை திருத்தம் பார்த்தருளிய தருமபுரி புலவர் பெருந்தகை திரு. க. தியாகசீலன் அவர்களுக்கும் என் நன்றியைச் செலுத்துகின்றேன்.

அன்பன்,
செ. சோமசுந்தரம்
17, அப்புசுப்பையர் தெரு, பிச்சனூர்,
குடியேற்றம் (வ. ஆ.)

வேண்டுகோள் !

செங்குந்தர் குலம் பன்னெடுங் காலமாக சீரோடும் சிறப்போடும் இருந்த குலமாகும். இடைக் காலத்தில் ஒற்றுமையுணர்வு மறந்து இந்நாள் வரை முன்னேற முடியாத குலமாக இருப்பது யாவரும் அறிந்ததே !

அரசர்களாகவும் படைத் தலைவர்களாகவும் இருந்து அனைவரின் பாராட்டிற்கும் உரிய நமது உயர் குலத்தின் வரலாற்றினை நம்மவர் அறிந்து கொள்ள இது போன்ற ஒரு நூலை வடார்க்காடு மாவட்டச் செங்குந்தர் சங்கச் சார்பில் வெளியிட விரும்பினேன்.

நயம்பட எடுத்துரைக்கும் நாவன்மை படைத்தவரும், நன்முறையில் எழுதும் எழுத்தாற்றல் பெற்றவரும், "**திருக்குறள் நெறித் தோன்றல்**" போன்ற அரசு விருதுகளைப் பெற்றவரும், **காஞ்சிபுரம் தருக்க வேதாந்த போதகாசிரியர் ஆ. செங்கல்வராய முதலியார்** அவர்களின் மகனுருமாகிய குடியேற்றம் **புலவர் செ. சோமசுந்தரம்,** M. A., B. Ed., அவர்கள் இந்நூல் வெளிவருவதற்கான எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்று நம் மாவட்ட சங்கத்திற்கு அளித்துள்ளார். அவருக்கு நம் நன்றி உரித்தாகுக.

அவரே, தாம் எழுதிய இந்நூலில் நமது கடமைகளை ஆங்காங்கே வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நம் முன்னோர்கள் நம்மை நம்பி, நம்மிடத்தில் ஒப்படைத்துள்ள **பொருள்களையும் கொள்கைகளையும்** அவர்கள் எண்ணத்திற்கு எள்ளளவும் மாறுபடாமல் நாம் பணியாற்றினல் நம்குல மக்கள் மேலும் மேலும் வளர வழியுள்ளது. சிறு சிறு மனக்கசப்புகளையும், பெரிதாக வளர்த்து, வேற்றுமையும் பிளவும் கொண்டு நம் சமுதாய வளர்ச்சிக்கு

நாமே தடைக்கல்லாக இருக்கிறோம். தன்னலம் என்பதே சமுதாய வளர்ச்சியில் எப்போதும் இருந்தல் கூடாது. சிறு பிணக்குகளில் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்தலை உயர்வாகக் கருதவேண்டுமே தவிர, இழிவாகக் கருதக் கூடாது.

சுயகவுரவம், தன்னலம் போன்ற குணங்கள்தாம், நம் ஒற்றுமையை உருக் குலைக்கின்றன.

இந்தக் குணங்களையும் கருத்து வேறுபாடுகளையும் மறந்து நம்மவர் ஒன்றாகச் சேர்ந்து பாடுபட வேண்டும். அப்போதுதான் நம்முடைய சமுதாயத்தின் ஒற்றுமையை நம்மால் நிலைநாட்ட முடியும்.

சிறு பூசல்கள் காரணமாக நமக்குள் பிளவு ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொருவரும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை யற்று, விரிசல் உள்ளத்துடன் சுயகவுரவம் பார்த்து வருகிறோம். அதனால் நம் சமூகம் சோகப் பெருமூச்சுக்குச் சொந்தங் கொண் டாடுகிறது. ஆக, நமக்குள் ஒற்றுமை இல்லையென்றால் எள்ளளவு முன்னேற்றமும் எய்திட இயலாது.

நிலையற்ற, ஒற்றுமையற்ற நம்மை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள், நம் சமுதாயம் ஒற்றுமையாகவும், வலுவான ஓர் அமைப்பாகவும் விளங்க வேண்டும். அதற்காக, ஒற்றுமை, ஒற்றுமை என்று நம் உதடுகள் உச்சரித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

கல்வித் துறையில் நம்மவர்கள் மேலும் முன்னேறுதல் வேண்டும். குறிப்பாக சொல்லப் போனால், எல்லாருமே கற்றவர்களாக வேண்டும். நன்றாகப் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை உயர் கல்வி வித்தகர்களாக உருவாக்குதல் வேண்டும்.

நம் குலத்திற்கென்று விதிக்கப்பட்ட நெய்தல் தொழில் மிக உயரிய தொழிலே! இருப்பினும் நவீன முறையில் முன்னேற்றம் காணும் வகையில் மாற்றமும் செய்து

கொள்ள முன்வர வேண்டும். அத்துடன் வேகமாக மாறிவரும் காலத்தையும் கவனத்தில் கொண்டு பற்பல தொழில்களிலும் நம்மவர் ஈடுபடுதல் வேண்டும்.

உழைப்பு, உறுதியான எண்ணம் இவை இரண்டும் இருந்தால் எத்தொழிலிலும் ஏற்றம் பெறலாம்.

இடம்விட்டு இடம் மாறி எங்கிருப்பினும் நம்இன உணர்வைக் காட்டுவதோடு அவர்களோடு உறவும் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இந்நூலாசிரியர் முன்னுரை இடத்தில் குறிப்பிட்டுள்ளது போல், "**சங்கம் எனக்கு என்ன செய்தது என்ற கேள்வியை எழுப்பாமல், சங்கத்திற்கு நாம் என்ன செய்தோம்**" என்பதை ஒவ்வொருவரும் எண்ணுதல் வேண்டும்.

"**தங்கம் செய்யாதது சங்கம் செய்யும்**" என்பார்கள். ஆகவே, நமது சங்கத்தை வலிவுடையதாகவும் பொலிவுடையதாகவும் ஆக்குதல் வேண்டும். அத்துடன் பிற இனத்தவர் நலத்தையும் நாடி அனைவரின் போற்றுதலுக்கும் உரியவராய் அறுமுகக்கடவுளின் வழித்தோன்றல்கள் என்பதை அவனிக்குப் புலப்படுத்துதல் வேண்டும். அவ்வகையில் நமது செங்குந்தர் மரபின் மாண்பையும், சங்கத்தின் சாரத்தையும் சந்தனத்தமிழில் நூலாக்கித் தந்த நூலறி புலவர் திரு செ. சோமசுந்தரம் அவர்கட்குக் கைக்கோளர் சமுதாயம் கடமைப் பட்டுள்ளது என்று நான் உரைத்தல் மிகையே.

அன்பன்,
கா. அ. ஷ. பத்மநாபன்,
தலைவர், வடார்க்காடு மாவட்ட செங்குந்தர் சங்கம்,
5, பெரியவர் சண்முகனார் தெரு, திருப்பத்தூர்-635 601.

1. நலம் தரும் நமது குலம்

முருகன் அவதாரம் :

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவனிடம் சூரபன்மன் நெடுந்தவம் புரிந்து 1008 அண்டங்களை ஆளும் ஆற்றலையும் 108 யுகம் ஆயுளையும் பெற்றதோடு "உம்மை நமது சக்தியாலன்றி எவராலும் வெல்ல முடியாது" என்ற வரத்தையும் பெற்றான்.

பெற்ற பெரும் பதவியையும் பெருவரங்களையும் நற்றவப் பேறு என்று கருதாத சூரபன்மனும் அவன் தம்பியர்களான சிங்கமுகா சூரனும் தாருகா சூரனும் தங்கை அசமுகியும் பிற அசுரர்களும் தேவர்களையும் முனிவர்களையும் வதைத்து வாட்டினர்.

தகுதியுடைய சிவனைப் புறக்கணித்த தக்கனது யாகத்தில் கலந்து கொண்டதன் விளைவு இது என்பதைத் தெரிந்து தெளிந்து கொண்ட தேவர்கள், தங்களை மன்னித்துச் சூரனின் கொடுமையில் இருந்து காத்தருளுமாறு உமையொரு பாகனின் உன்னத திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வேண்டினர்.

ஆறுதலைப் பெருமானாகிய ஆண்டவன் அவர்களுக்கு ஆறுதலைச் சொல்லி "என் சக்தியால் தோன்றும் முருகனால் சூரனும் அசுரர்களும் அழிவார்கள்" என்று கூறியருளினார்.

தேவர்களோ அங்குப் பர்வதராசன் மகள் பார்வதி தவம் இருக்க, இங்குச் சிவபெருமான் யோகத்தில் இருக்க முருகக் கடவுள் உதிப்பது எப்போது என்ற அவசர ஐயத்தில் சிவனின் யோகத்தைக் கலைக்க மன்மதனை அனுப்பினர்.

விளைவு? மன்மதன் எரிந்து நீருய்ப் போனுன்! அவன் மனைவி ரதியின் கண்களில் நீர் ஆருய்ப் போனது!! தேவர்கள் மீண்டும் கயிலை சென்று தங்கள் கவலையைத் தெரிவித்தனர். தவறுகளை மன்னிக்கும் தயாநிதியாகிய சிவன், "பார்வதியை மணந்து சூரனை அழிக்கக் குழந்தையைத் தருவோம்" என்று தேவர்களுக்கும் "அத்திருமணத்தின் போது மன்மதனை எழுப்பித் தருவோம்" என்று ரதிக்கும் வாக்களித்தார்.

பங்குனி உத்திரத்தன்று பார்வதி திருமணம் பார்த்தவர் மகிழப் பாங்குடன் நடந்தது.

திருமணம் ஆகியும் தங்கள் குறைதீரக் குழந்தை தோன்ற வில்லையே என்று வருந்திய தேவர்கள் வணக்கத்துடன் தங்கள் வருத்தத்தைச் சிவனிடம் எடுத்து முறையிட்டனர்.

காலம் அறிந்த கண்ணுதல் பெருமான் தம் ஆறுமுகத்தில் உள்ள ஆறு நெற்றிக் கண்களில் இருந்து ஆறு தீப்பொறிகளை வெளிப்படுத்திஞர். அதன் வெம்மைக்கு ஆற்ருத தேவர்களும் உமையும் ஓடினர்! பின்னர் சிவனிடம் வந்து பணிந்து சேர்ந்தனர்!

இப்போது சிவன் எல்லோர்க்கும் ஒருதிருமுகத்தோடு காட்சிதந்து, அச்சோதிப் பொறிகளைச் சுருக்கி வாயுவிடம் வழங்க, அவன் அதனைத் தாங்க முடியாது அக்னியிடம் அளித்தான். அக்னியோ அதனைப் புனிதக் கங்கையில் இட, அக்கங்கை அதனைச் சரவணப் பொய்கையில் சேர்த்தாள். அங்கு ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாய் வளர்ந்தன.

பின்னர் சிவன் உமையொடு சரவணப் பொய்கை சென்று, உமையை நோக்கி, "நமது புதல்வர்களை எடுத்து வருக" என்று கூற உமையும் உளம் மகிழ்ந்து அக்குழந்தைகள் ஆறினையும் தமது கரங்களால் எடுத்து அணைக்க ஆறுமுகங்களும்

பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு ஓர் உடலாய் ஒப்பற்ற முருகனாய்-ஒரு குழந்தையாய்த் தோன்றியது! அக்குழந்தையோடு இருவரும் கயிலை சென்றனர்.

நவ வீரர் தோற்றம் :

தீப்பொறிகளின் வெம்மை தாங்காது உமை ஓடிய போது அவரது சிலம்பிலிருந்து ஒன்பது மணிகள் சிதறின. பரம் பொருளின் அருளால் அவ்வொன்பது மணிகளும் பார்வதியின் வடிவத்தோடு நவசக்திகளாக மாறின.

சிவன் அவர்களை அருகில் அழைக்க அவர்களும் விருப்பொடு வந்து வணங்கி நின்றனர். அவ்வளவில் அந்த நவசக்திகளும் கருக்கொண்டனர்.

இவையனைத்தையும் கண்ட உமையம்மை தனக்கு அப்பேறு கிடைக்காத காரணத்தால் அச்சக்திகளிடம் பெருஞ் சினம் கொண்டு " உங்கள் கர்ப்பம் வெளிப்படாமல் இருக்கக் கடவது " என்று சபித்தார்.

அவ்வுரை கேட்ட நவசக்திகளும் நடுங்கி, பயந்து உடல் வியர்த்தனர். அவ்வியர்வைத் துளிகளில் இருந்து சிவனின் இன்னருளால் இலட்சம் வீரர்கள் தோன்றி சிவனையும் உமையையும் வணங்கி நின்றனர்

மேலும் நவசக்திகளின் திருவயிறுகளில் நலந்தரு நந்தித் தேவர் முதலிய சிவகணத் தலைவர்கள் சிவ சிந்தனையில் மூழ்கி வளர்ந்து வந்தனர். அதனால் அச் சக்திகள் மிகவும் தளர்ந்து, பார்வதியைப் பணிந்து, " எங்களால் இனியும் தாங்க இயலாது" என்று வேண்டி நின்றனர். பரமனும் உமையை நோக்கி " உமது சாபத்தால் வருந்தும் இவர்களுக்கு அருள் புரிக " என்றார்.

உமையும் உளம் மகிழ்ந்து அச்சக்திகளை நோக்கி, " நீவிர் பொற்புடைய புதல்வர்களைப் பெறுவீர்கள் ", என்று கூறி யருளினர். உடனே, வீரவாகு தேவர் முதலாக, வீரகேசரி தேவர், வீரமா மகேந்திர தேவர், வீரமா மகேச்சுர தேவர் வீரமா புரந்தர தேவர், வீர ராக்கத தேவர், வீரதீர தேவர், முதலிய நவவீரர்கள் நவசக்திகளிடம் இருந்து உந்தி வழியாய் உன்னத குலமாய் நலமுடன் தோன்றினர்.

சிவனும் உமையும் அவர்களைப் பார்த்து, " நீங்கள் உங்கள் துணைவர்களான இலட்சம் வீரர்களுடன் சேர்ந்து செவ்வேள் முருகனுக்குச் சேவை செய்து வாழுங்கள் " என்று கூறியருளி இருவரும் முறையே அவர்களுக்கு வாட்படையும் குந்தப்படையும் வழங்கினர்.

வீரவாகு முதலிய நவவீரர்களை உபசுப்பிரமண்யர் என்று உயர்ந்தோர் உவந்து போற்றுவர்.

எனவே நாம்! வீரவாகு முதலிய நவவீரர்கள் வழி வந்தோர்; கைலாயப் பரம்பரையினர்; நந்திகண வழித் தோன்றல்கள்; உபசுப்பிரமண்யர் வழி வந்தோர்; முருகக் கடவுளின் உடன் பிறப்புகள்!

2. வீரவாகு தேவரின் வீரம்

முருகனுக்கு வாகனம் தந்தது :

கயிலையில் சண்முகக் கடவுள் தமது தம்பியர்களாகிய வீரவாகு முதலிய நவ வீரர்களுடன் இலட்சம் வீரர்கள் புடை சூழ அற்புதத் திருவிளையாடல்கள் ஆற்றிவந்தார்.

நாரத முனிவர் செய்த யாகத்தில் அகிலத்தை அழிக்க வந்த ஆலகால விஷம் போல ஆட்டுக்கிடாய் ஒன்று தோன்றி அந்த யாகத்திற்குத் தொல்லை தந்தது!

நாரதர் வேதனை அடைந்து வேலனை வேண்டுவதே இனி நம் வேலை என்று எண்ணி அவரைத் தஞ்சம் அடைந்தார்.

வேலவன் தம்பி வீரவாகுவை அழைத்து அந்த ஆட்டுக் கிடாவைக் கொண்டு வருமாறு கட்டளையிட்டார். வீரவாகு தேவரும் அக்கட்டளை ஏற்று அண்டமெலாம் தேடிக் கண்டு அதனை இழுத்து வந்து சண்முகக் கடவுளுக்கு வாகனமாக்கி, நாரதர் யாகத்தையும் முடித்து வைத்தார்.

வீரவாகு தூது :

சூரனின் தம்பி தாரகாசூரனும் அவனுக்குத் துணைபோன கிரவுஞ்ச மலையும் அழிய முருகப்பெருமானுக்குத் துணையாக முன்னின்றார்.

செந்தில் மாநகரில் தங்கியிருக்கும் செவ்வேள் முருகன் அறத்தை எண்ணி மகேந்திரபுரியுள் தங்கியிருக்கும் சூரனின் கருத்தறிந்துவர வீரவாகுவைத் தூது அனுப்பினார்.

வீரமும் விவேகமும் நெஞ்சில் ஈரமும் உடைய வீரவாகு சூரனுக்குப் பல நல்லுரைகளை நயம்பட நவின்றார். பல்லாண்டு தவம் செய்து பெற்ற பலனையும் பதவியையும் தகாத செயல் மூலம் தவற விடாதே என்றார்.

"இனியாவது இந்திரன் மகன் சயந்தன் முதலிய அனைவரையும் விடுதலை செய்து, வேலவனை வேண்டிப் பணிக" என்றார்.

ஆனால் அவனோ "பல்லும் முளைக்காத பாலனைப்பணிந்து உன் சொல்லையும் கேட்பனோ? தேவர்களை என்றும் சிறை விடேன்" என்று மறுத்தான்!

சூரன் கட்டளையும் வீரவாகுவின் வீரமும் :

மேலும் வீரவாகு கூறிய விளக்கத்தை ஏற்க மறுத்த சூரன் வீரவாகுவைப் பிடிக்கக் கட்டளையிட்டான். அந்த அளவில் அந்த அவையிலேயே 1000 அசுரர்களைக் கொன்று வீரவாகு தன் வீரத்தை வெளிப்படுத்தினார்!

அடுத்துச் சூரனால் அனுப்பப்பட்ட சகஸ்திரவாகுகளைக் கொன்றார். சூரபன்மனின் மகன் வச்சிரவாகுவைக் கொன்றதோடு அவன் முதுகுத் தண்டெலும்பை வீரமகேந்திர கோபுரத்தில் ஏற்றி விளையாடினார்!

தூதுரைக்க வரும் போதும் தூதுரைத்துத் திரும்பும் போதும் இலங்கையைக் காவல் புரியும் அசுரர்களை அழித்தார்.

மரத்தை வெட்டுவதற்கு முன்பு அதன் கிளைகளை வெட்டுவது போல சூரனின் அசுரப் படைகளை அழித்து, சண்முகக் கடவுளிடம் திரும்ப வந்து வீரவாகு தேவர் "போர் புரிய நாளையே மகேந்திரபுரி எழுந்தருள்க" என்றார்.

போர் முகத்தில் வீரவாகு :

வீரவாகுவின் வீரத்திற்குப் புறங்காட்டி சூரன் மகன் இரணியன் கடலில் ஒளிந்து கொண்டான். இன்னொரு மகன் அக்னிமுகா சூரனும் அழிந்தான்.

அசுரர்களின் மாயத்தால் தன் தம்பியர் எண்மரும் இறந்தது கண்டு, கணையொன்று எடுத்துத் தம் கை நகத்தால் இயமனுக்குக் கடிதம் எழுதி அதனை வில்லில் தொடுத்து அனுப்பி அவர்களைத் திரும்ப வரச்செய்தார்.

மேலும் சூரனின் மக்கள் மூவாயிரவரையும் கொன்று அவனுடைய முதன் மந்திரி தருமகோபனையும் தருமம் நிலைக்கக் கோபத்தோடு கொன்றார்!

குழந்தைப் பருவத்திலேயே சூரியனைத் தன் தொட்டிலில் கட்டிப் போட்ட சூரன் மகன் பானுகோபனைக் கொன்று சூரபன்மனை உளம் குலையச் செய்தார்!

வேண்டும் பரிசு :

வீரவாகு பானுகோபனை வென்ற செய்தி கேட்டு வேல் முருகன் மிகவும் மகிழ்ந்தார். அவர் வீரவாகுவை நோக்கி, "செயற்கரிய செயல் செய்த உனக்கு நான் தருதற்குரிய பரிசு யாது?" என்று அன்புடன் கேட்டார்.

அதற்கு வீரவாகு, "உங்கள் திருவடிகளுக்கு அன்பு செய்து, இன்று போல் என்றும் உங்களோடு இருப்பதே நான் வேண்டும் பரிசு", என்று பணிவுடன் தன் பக்தியை வெளிப்படுத்தினார்!

3. முசுமுகன் முசுகுந்தனுன்!

முன் வரலாறு :

திருக்கயிலையில் வில்வ மரத்தடியில் சிவன் சிவகாம சுந்தரிக்குச் சிவாகமங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார். அப்போது கருங்குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து வில்வத் தழைகளை அவர்கள் மீது பறித்துப் போட்டது. அதனுல் சிவகாம சுந்தரி அதனைச் சீற்றத்தோடு நோக்க, சிவன் "நம் குழந்தை வில்வத்தை நம் மீது அன்புடன் போட்டது. சினம் கொள்ளற்க" என்று கூறினுர். அத்துடன் அக்குரங்கைப் பார்த்து "மண்ணுலகில் பிறந்து மன்னனுய் வாழ்ந்து இவ்விண்ணுலகம் வருக" என்று கட்டளையிட்டார்.

கருவூர் மன்னும் கந்த விரதமும் :

அதனுல் முசுமுகன் சூரிய குலத்தில் தோன்றி கருவூர் மன்னனுகி காவல் புரிந்தான். அவன் தன் குருவான வசிட்டரின் வாக்கின்படி கந்தர்சஷ்டி விரதத்தை மேற்கொண்டான்.

முசுமுகனின் விரதத்தை ஏற்றுக் கொண்ட கந்தவேள் நவவீரர்களோடு காட்சி தந்து "வேண்டிய வரங்களைக் கேட்க" என்றார்.

கருவூர் மன்னன் கந்தவேளை வணங்கி, "நான் மன்னர் மன்னனுய் வாழ்தல் வேண்டும். தேவரீர் பக்கத்தில் இருக்கும் வீரவாகு முதலிய நவவீரர்களை எனக்குத் துணைவராகத் தருதல் வேண்டும்" — என்று கேட்டுக் கொண்டான்.

வீரவாகு முதலியோர் மண்ணுலகு வருதல் :

உடனே சண்முகத் தேவர் நவவீரர்களைப் பார்த்து, "நீங்கள் சிலகாலம் இவ்வரசனுக்குப் படைத் துணை வ ர ா ய் இருப்பீர்களாக" — என்று கட்டளையிட்டார்.

ஆனால் வீரவாகு முதலியோர் ச ண் மு க க் கடவுளை வணங்கி, "ஆயிரத் தெட்டு அண்டங்களுக்கு அ தி ப தி ய ா ய் விளங்கிய சூரனை அழிக்கத் துணையாக இருந்த நாங்கள், தங்களைப் பிரிந்து, மண்ணுலகு மன்னனுக்குக் காவலர்களாய் இருக்க எங்களால் இயலாது" என்றனர்.

இவர்கள் இவ்வாறு மறுத்தது கண்டு முருகப் பெருமான் சிறிது சினத்தோடு முறுவல் செய்து, "யாம் சூரனை வதைத்த பின்னர், தெய்வயானையை மணந்தோம். அத்திருமணத்திற்கு வருகை தந்த தேவமாதர்கள் சிலர் உ ங் க ளை யும் நீங்கள் அவர்களையும் கண்டு வி ரு ம் பி ய கர்மத்தின் படி நீங்கள் மக்களாய்ப் பிறக்க வேண்டும். அத்தேவ மாதர்களும் மண்ணுலக மங்கையர்களாய்ப் பிறப்பார்கள். அ வ ர் க ளை நீங்கள் மணந்து சோழப் பேரரசின் செல்வர்களாய் விளங்கிப் பின்னர் எம்மிடம் வருவீர்கள். மேலும் நீங்கள் பிறந்த போது உமை உளமகிழ்ந்து கொடுத்த குந்தப் படையினால் குவலயம் முழுமையும் வென்று முசுமுகனை மன்னர் மன்னனாய் ஆக்குதல் வேண்டும்" என்று எடுத்துரைத்தார்.

இனியும் மறுப்பதற்கு வழி தெரியாத வீரவாகு முதலிய நவவீரர்களும் முசுமுகனுக்குப் படைத் தலைவர்கள் ஆயினர். முதல்வரின் புதல்வர்களாய்ப் பிறந்து குந்தப்படை கொண்ட நவவீரர்களின் துணையால் முசுமுகச் சோழன் முசுகுந்தச் சோழன் என்று பெயர் பெற்று ஏற்றம் பெற்றான்.

4. நவவீரர்களும் முசுகுந்தனும்

நவவீரர்கள் தந்த நன்மக்கள் :

கந்தவேள் கூறிய வண்ணம் செங்குந்தர்களாகிய வீரவாகு முதலியோர் முசுகுந்த மன்னனின் மூத்த அமைச்சர் களாகவும் படைத்தலைவர்களாகவும் இருந்தனர்.

முசுகுந்தனும் சோழ மரபில் தோன்றி வளர்ந்த தேவ மாதர்களை வீரவாகு முதலிய நவவீரர்களுக்குத் திருமணம் செய்து வைத்தான்.

வீரவாகுவின் மனைவியான **புட்பகந்தி**, **சித்திரவல்லி** என்ற மகளையும் அனகன், சனகன் என்ற இரண்டு மகன்களையும் பெற்ருள். மற்ற எண்மரும் தங்கள் தங்கள் மனைவியரோடு மகிழ்ந்து ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டு ஆண் மக்களையும் அளவற்ற பெண் மக்களையும் பெற்றனர். ஆக நவவீரர்கள் ஆயிரத்துத் தொள்ளாயிரம் வீரர்களைப் பெற்றனர். இவர்களின் உதவியோடு எத்திக்குகளிலும் வெற்றிக் கொடி நாட்டி முசுகுந்தனை மன்னர் மன்னனுக்கி மகிழ்ந்தனர்.

முசுகுந்தனும் சித்திரவல்லியும் :

வீரவாகு தேவரின் மகளான சித்திரவல்லியின் பெண்மை நலத்தைக் கேட்டறிந்த முசுகுந்தன் அவளை மணந்துகொள்ள விரும்பினுர். வீரவாகு தேவரும் உளம் உவந்து உடன்பட திருமணமும் சிறப்புடன் நடந்தது. முசுகுந்தனும் சித்திரவல்லியும் இல்லறம் எனும் நல்லறத்தை நன்கு நடத்தி வந்தனர்.

முசுகுந்தன் மகனைப் பெறுதல் :

பலகாலம் மகப்பேறு இல்லாது முசுகுந்தனும் சித்திர வல்லியும் வருந்தினர். ஏற்கனவே வீரதீரன் திக்கு விசயம் செய்த போது மகப்பேற்றினைத் தரும் மாங்கனிகளை உடைய மாமரம் ஒன்று கேரளத்தில் இருப்பது அறிந்திருந்தான்.

எனவே அவன் கேரளம் சென்று அந்நாட்டு மன்னனிடம் மாங்கனி ஒன்று தருக என்று வேண்டி அவன்தர மறுத்ததால், அக்கேரள மன்னனைத் தன் தேர்க்காலில் கட்டி வந்ததோடு மாமரத்தையும் வேரோடு பெயர்த்தெடுத்து வந்தான்.

அம்மாங்கனி உண்ட சித்திரவல்லி, மாதொரு பாகன் அருளால் மங்கல நாளில் அங்கிவன்மன் என்ற அழகிய குழந்தையைப் பெற்றாள்.

தியாகராசப் பெருமானைக் கொண்டு வருதல் :

தேவர்களுக்கு எப்போதும் தொல்லை கொடுத்து வந்த வலாசூரன் என்ற அசுரனை அழிக்கத்தேவர் தலைவன், முசுகுந்தன் உதவியை நாடினான்.

முசுகுந்தனும் நவவீரர்களுடன் விண்ணுலகு சென்று, தேவேந்திரன் வலாசூரனின் தலையைத் துணிக்கப் பேருதவி செய்தான்,

செய்ந்நன்றி மறவாத இந்திரன் முசுகுந்தனிடம் “ என்ன வேண்டும் ” என்று கேட்க முசுகுந்தனே “ தாங்கள் வழிபடும் தியாகராசப் பெருமானைத் தருதல் வேண்டும் ” — என்றான்.

தியாகராசரைத் தியாகம் செய்ய விரும்பாத இந்திரன் தேவதச்சர்களைக் கொண்டு ஆறு தியாகராசப் பெருமான் மூர்த்தங்களைச் செய்து முசுகுந்தனிடம் கொடுத்தான்.

இறைவன் அருளால் உண்மையை உணர்ந்து கொண்ட முசுகுந்தன் ஆறு மூர்த்தங்களும் உண்மையானவை அல்ல என்று மறுக்க, இந்திரன் செய்வதறியாது ஏழாவதாக உண்மைத் தியாகராசரைக் கொடுத்தான்.

முசுகுந்தன் அவ்வேழு மூர்த்தங்களை மண்ணுலகு கொண்டு வந்து திருவாரூர் முதலிய தலங்களில் எழுந்தருளச் செய்தான்.

5. செங்குந்தர் ஆட்சி

அங்கிவன்மனும் அனகனும் முடிசூடல் :

கந்தவேள் கட்டளைப்படி முசுகுந்தச்சோழனும் வீரவாகு முதலிய நவவீரர்களும் மண்ணுலக ஆட்சியை மாண்புற நடத்திய பின்னர் ஆறுமுகன் திருவடியை அடைய விரும்பினர்.

ஆகவே முசுகுந்தனின் மகன் அங்கிவன்மனை கருவூருக்கு அரசனாகவும் வீரவாகு தேவரின் மூத்தமகன் அனகனை காஞ்சிக்கு அரசனாகவும் முடிசூட்டி மகிழ்ந்தனர்.

மேலும் வீரவாகு தேவர் ஏற்றமிகு 72 நாடுகளை நான்கு எல்லைகளாக வகுத்துக் கீழ்ப்புறத்து எல்லையைச் சிவபுரம் என்றும் மேற்புரத்து எல்லையை விரிஞ்சிபுரம் என்றும் வடபுறத்து எல்லையைச் சோளிங்கபுரம் என்றும் தென்புறத்து எல்லையைத் தொந்திபுரம் என்றும் நான்காக வகுத்து நான்கு எல்லைகளுக்கும் முறையே சனகன், கஜகோளன், சிவசங்கரன், கௌமாரன் ஆகியோரை நாடாளும் அரசர்களாக நியமித்துச் செங்குந்தர் ஆட்சியை நிறுவினர். இவைகளுக்கெல்லாம் தலைமை நாடாகக் காஞ்சிபுரத்தை ஏற்படுத்தினர்.

காஞ்சி மாநாட்டில் ஆயிரத்துத் தொள்ளாயிரவர் என்று சொல்லும் நவவீரர்கள் வழிவந்து ஆண்டவர்களாகிய செங்குந்தர் களுக்கு 72 நாடுகளிலும் உள்ள நம்மவர்கள் கட்டுப்படுதல் வேண்டும் என்றும், செய்யுந் தொழிலில் சிறந்த நெய்யுந் தொழிலை மேற்கொள்ள வேண்டும் என்றும், முருகக் கடவுளை முப்போதும் துதித்து வருதல் வேண்டும் என்றும் பல அறிவுரைகளை வீரவாகு தேவர் தம்மக்களுக்கு எடுத்துரைத்தார்.

விரவாகு தேவரின் ஆறுதல் :

வீரவாகு பின்னர் தம்மக்களைப் பார்த்து, "நாங்களும் முசுகுந்தனும் கந்தனை அடையக் கடுந்தவம் செய்து கந்தமாதனம் செல்கின்றோம்" — என்று கூறினார். அதைக் கேட்ட அம்மக்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

அப்போது வீரவாகு தம் மக்களைப் பார்த்து "மைந்தர்களே! அறுமுகக்கடவுள் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் தோறும் சூரசம்ஹாரம் நடைபெறும். அதுபோது நமது குலச் செம்மல்கள் ஒன்பது பேரை நவவீரர்களாக நியமித்துச் சஷ்டி விரதம் பூண்டு அவர்களை நாங்களாகக் கருதி வழிபடுங்கள் என்றும்;

சூரனிடம் யாம் தூதுபோனபோது அவன் மகன் வச்சிரவாகுவைக் கொன்று, அவன் முதுகுத் தண்டெலும்பை எடுத்து வீரமகேந்திர கோபுரத்தில் நாட்டி விளையாடியதைப் போல எழுபத்திரண்டு நாடு நமது என்பதைக்காட்டும் வண்ணம் 72 அடி உள்ள கம்பம் நாட்டி நமது குலப்பிள்ளை ஒருவனை விரத ஒழுக்கத்தோடு அதில் ஏற்றி விளையாடச் செய்து, அவனை நாமாக எண்ணிக் களிப்பீர்களாக என்றும் கனிவுடன் கூறினார்.

பின்னர் நவவீரர்களும் முசுகுந்தனும் விண்ணுலகு அடைந்தனர்.

காஞ்சி மாநாட்டு மாண்பு :

விண்ணுலகு அடைந்த நவவீரர்கள் சண்முகக் கடவுளைச் சரணடைந்து, "எம்பெருமானே! எங்களுக்கு அருள்புரிந்தது போல, எமது குலத்தோன்றல்களுக்கும் அருள்புரிதல் வேண்டும். அவர்களுக்குத் தாங்களே குலதெய்வமாக இருத்தல் வேண்டும்" என்று வேண்டினர். அதற்கு அறுமுகக்கடவுள் "உமது

பிள்ளைகள் நமது பிள்ளைகள்; யாம் சீர்மிகு சீர்காழியில் ஞானசம்பந்தராய் அவதரித்து அவர்களுக்கு அருள் பாலிப்போம்'' என்ருர்.

அவ்வாறே அறுமுகப்பெருமான் திருஞானசம்பந்தராய் அவதரித்து — சிவத்தலங்கள் தோறும் செந்தமிழ்ப் பாடல்கள் பாடி, காஞ்சிபுரம் எழுந்தருளி, சிலகாலம் அவர்களுடன் தங்கியிருந்து உபதேசம் செய்தருளினர். அவர் காஞ்சியில் எழுந்தருளிய இடமே 'பிள்ளையார் பாளையம்' ஆகும்.

செங்குந்தர் நீதி முறை :

குலத்தொழிலாம் நெசவுத்தொழிலுக்குரிய பாவடியையே பொதுமன்றமாகக் கொண்டு அங்குக் கூடித் தங்களது சிறு வழக்குகளைத் தீர்த்துக் கொண்டனர்.

செங்குந்தர் நீதியைக் காக்கவும் சமுதாயத்தை வளப்படுத்தவும் ஊர், மேலூர், நாடு, மேல் நாடு, மகா நாடு என்று ஐந்து பிரிவுகளை ஏற்படுத்தினர்.

தன் குறையைச் சொல்ல எந்த ஒரு குடிமகனுக்கும் உரிமையுண்டு. குடிமக்களில் திருமணமானவர்கள் காரியக் காரர்களாகவும் திருமணமாகிக் குழந்தைகளைப் பெற்றவர்கள் பெரியதனக்காரர்களாகவும் இருப்பர் இவர்களைக் குடிமக்கள் அனைவரும் கூடித் தேர்ந்தெடுப்பர்.

சிறு சிறு வழக்குகளை அனைவரும் ஏற்கும் வண்ணம் இவர்களே முடித்துவிடுவர். சிக்கலான வழக்குகளை மேலூர், நாடு முதலியவற்றின் உறுப்பினர்கள் சேர்ந்து உரிய நீதி வழங்குவர்.

வழங்கிய நீதி தம்மைப் பாதிப்பதாக இருந்தாலோ தண்டனை அதிகம் என்று கருதினலோ முறையாக மேல்

முறையீடு செய்து கொள்ளவும், தண்டனையைக் குறைத்துத்தர சபையைக் கண்டு கொள்ளவும் உரிமையுண்டு.

முடிவான தீர்ப்பு வழங்கும் அதிகாரம் மாநாட்டிற்கே உரியது. ஒவ்வோர் ஊரிலிருந்தும் நாட்டிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மாநாட்டில் அங்கம் வகிப்பர். மாநாட்டின் தீர்ப்புகளையும் கட்டளைகளையும், அதன் கீழ் கட்டுப்பட்டுள்ள ஊர், மேலூர், நாடு, மேல் நாடு அனைத்திலும் பின்பற்றப்படும்.

இம்முறையில் செங்குந்தர் சமுதாயம் கட்டுக்கோப்புடனும் கடமை உணர்வுடனும் கண்ணியத்துடனும் இருந்து, தங்களுக்குள்ள பிணக்குகளைத் தீர்த்து இணக்கமாய் இருந்ததை எண்ணிப்பார்த்து இன்றும் மகிழலாம்.

6. குலப் பெயர்களும் தொழில் தொன்மையும்

முதலியார் :

உலகம் அனைத்திற்கும் சிவன் முதல்வன். அம்முதல்வன் அருளால் முருகப் பெருமானுக்குத் துணையாய் அவதரித்த வீரவாகு முதலிய நவவீரர்கள் வழிவந்தவர்கள் ஆனதால் 'முதலிகள்' எனப்பட்டனர்.

'முதலி' என்று படைத் தலைவர்களை அழைப்பர். முருகனுக்குப் படைத்தலைமை பூண்ட காரணத்தாலும் முசுகுந்தச் சோழன் முதலிய மன்னர்களுக்கும் படைத் தலைமை பூண்ட காரணத்தாலும் 'ஆர்' என்ற சிறப்பு விகுதியும் சேர்ந்து 'முதலியார்' என்ற பெயர் நிலைத்து வந்தது.

அயலவர் படையெடுப்பு போன்ற காலங்களில் முதலில் பொறுப்பேற்று – முன்னின்று போர் புரிபவர் இம்முதலிகள் ஆவர் !

இதனை ஈட்டி எழுபது :

"இந்திரன் அயன்மால் தேவர் யாவர்க்கும் முதன்மை யாக
வந்தபான் மையினால் சூல மழுப்படை அத்த னார்க்கு
முந்திய நாமத் தானும் முதலியார் ஆகை யால்செங்
குந்தர்சந் ததிக்கும் அப்பேர் முதலியர் என்று கூறும்."

என்று சிறப்பித்துப்பாடுகிறது.

நிகண்டில் நாம் :

சேந்தன் திவாகரரால் எழுதப்பட்ட திவாகர நிகண்டு :

"செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்

தந்து வாயர் காருகர் கைக்கோளர்" – ஆகிய ஐந்து பெயர்களும் நம்மவரைக் குறிக்கும் வேறு பெயர்கள் என்று விளக்கம் தருகிறது.

செங்குந்தர் :

குந்தம் என்று சொல்லப்படும் ஈட்டி நமக்கு இறைவியால் அருளப் பெற்றது. படைக் கருவிகளில் சிறந்தவற்றைச் 'செம்மை' என்ற பண்புச் சொல் சேர்த்துச் சொல்வது மரபு. வேலைச் செவ்வேல் என்பது போல குந்தத்தைச் "செங்குந்தம்" என்றனர். அப்படைக்கு உரியவர் "செங்குந்தர்" எனப்பட்டனர் !

குந்தம் என்பது குறிதவருமல் எறியப்படுவது. குழுவாக யானைகளின் மேலிருந்து போர் புரிந்து பகைவர்கள் மீது குறிதவருமல் எறிந்து எதிரிகளை வீழ்த்துவர். இவர்களை **அத்திகோசத்தர்** என்றும் அழைப்பர்.

(அத்தி = யானை ; கோசம் = குழு)

இப்படையினர் மனஒருமைப்பாடும் நல்லொழுக்கமும் வீரமும் கொண்டு விளங்கினர்.

கைக்கோளர் :

நம் குலப் பெயர்களுள் "**கைக்கோளர்**" என்பதும் ஒன்று. மிகச் சிறந்த உண்மைகளை உணர்த்தும் இச்சொல் இன்று மருவி அப்பெயரின் உண்மைகளை உணர முடியாது மறைத்து விட்டது.

“ கைக்கோள் ” – என்றால் ஒழுக்கம் என்பது பொருள். ஆகவே புறவொழுக்கமும் அகவொழுக்கமும் உடையவர் கைக்கோளர் ஆவர்.

படைத்தலைவர்கள் வீரமும் ஈரமும் உடைவர்களாய் இருந்தால் மட்டும் போதா ! அவர்கள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் அரசின் நம்பிக்கைக்கு உரியவர்களாயும் இருத்தல் வேண்டும்.

கைக்கோளச் செங்குந்தர் அரசனது படைத்தலைவராய் மட்டுமில்லாது அவரின் நம்பிக்கைக் குரிய “ அகப்பரிவாரமாக ” வும் விளங்கினர். அக்கால அரசர்கள் “ இத்தனை நூறு கைக்கோளர்களை அகப்பரிவாரமாக நான் கொண்டுள்ளேன் ” என்று பெருமையோடு பேசும் அரச வாக்கியங்கள் காலத்தாலும் அழியாத கல்வெட்டுக்களில் இன்றும் காணலாம் !

எனவே, மூவேந்தர்களின் முழுமையான நம்பிக்கைக் குரிய படைத்தலைவர்களாக இருந்து, அவர்களால் அன்புடன் கைக்கொள்ளப் பட்டமையின் (படைத்தலைவராக) ‘கைக்கோளர்’ என்று பெயர் பெற்றனர் என்பதும் எண்ணத்தக்கது. கல்வெட்டுக்கள் பலவற்றில் “ தெரிஞ்ச கைக்கோளர் ” என்ற தொடரைக் காணலாம்.

போரில் பகைவரை வென்று சிறை செய்து திறை முதலிய பல்பொருள்களைக் “ கைக் கொள்வதில் ” சிறந்து விளங்கியதாலும்; தமக்குத் தாமே துணை என்பது போல தமது கையுழைப்பைக் கொண்டே வாழ்வு கண்டதாலும்; குந்தப் படையைக் கைக்கொண்டவர்கள் என்பதாலும் “ கைக்கோளர் ” என்ற பெயர் வழங்கியது எனினும் தவறுகள் ஏதும் இல்லை !

நிகரற்ற நெய்தல் தொழில் :

குந்தம் ஏந்திய காலத்திலும் பிற காலங்களிலும் கைக்கோளர்களாகிய செங்குந்த முதலியார்கள் செய்யுந் தொழிலை மேற்றொழிலில் நிகரற்று விளங்கும் நெய்யுந் தொழிலே மேற்கொண்டனர். உயிரைக் காக்கும் உணவினும் மானத்தைக் காக்கும் உடையே உயர்ந்தது, என்ற உன்னத பண்பாட்டின் அடிப்படையில் இத்தொழிலை ஒவ்வொரு குடும்பமும் குலத் தொழிலாய்க் கொண்டது.

காவிரி புகும் பட்டினத்தில் நம்மவர் நெசவுத் தொழிலே மேற்கொண்டு இருந்தனர், என்றும் அவர்கள் அரசனால் ஆதரிக்கப்பட்டதோடு காருகர் என்று அழைக்கப்பட்டனர் என்றும் விரிவாக சிலப்பதிகாரம் விளக்குகிறது. சில பகுதிகளில் நெய்தல் தொழிலை மேற்கொண்டவர்கள், தந்துவாயர் என்றும் அழைக்கப்பட்டனர்.

போர்க் குணமாகிய ரஜோ குணத்தில் சிறந்து விளங்கியவர்கள், இறுதியில் இறைவனடி விரும்பும் சத்துவ குணச் சான்றோர்களாயும் விளங்கினர்! அதனால் தான் எவ்வுயிர்க்கும் தீங்கு தராத மன ஒருமைப்பாட்டையும் வாய்மை நெறியையும் தெய்வ சிந்தனையும் தாமாக வளர்க்கும் நெய்தல் தொழிலை மேற்கொண்டு புண்ணியம் பெற்றனர். திருவள்ளுவரும் காந்தியடிகளும் இத்தொழிலை விரும்பி மேற்கொள்ளக் காரணம் இவைகளே!

ஆகாய நாதனாகிய தில்லைத் திருக் கூத்தாண்டவனுக்கு திருக்கொடியானது கைக்கோளராலேயே செய்து தரவேண்டும் என்பது வழிவழியாய் வருகின்ற மரபு என்றால் இவர் மகிமையை எதனாலும் எவராலும் விளக்க முடியாது!

சுவாமிகள் ஆவார். அவரை அப்பெயரால் உலகம் அழைக்காது ஞானியார்—என்றே அழைத்து மகிழ்ந்தது.

தமது 16–வது வயதிலேயே மடத்தின் அருளாட்சியை ஏற்றுப் பன்மொழிப் புலவராகவும் சைவசமயக் காவலராகவும் தமிழ் நாவலராகவும் விளங்கினர்.

தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள், "தம் வாழ்க்கையில் தாம் வணங்கிய தக்கார் ஞானியார் அடிகளே" என்று குறிப்பிடுகின்றார்.

அண்ணமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்க் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம், திருவையாறு தமிழ்க் கல்லூரி, மயிலம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, பிற ஆதீனங்கள் ஏற்படுத்திய தமிழ்க் கல்லூரிகள் அனைத்திற்கும் காரணமாய் இருந்தவர் ஞானியார் அடிகளே!

அவரது ஆசி பெற்ற மாணக்கர்களே கல்லூரிப் பேராசிரியர்களாகவும் தமிழ் வளர்ச்சித் தலைவர்களாகவும் விளங்கினர் —விளங்குகின்றனர்.

தமிழகத்தில் அடிகளார் அருளுரை வழங்காத மொழி— சமயத் தொடர்பான நிறுவனங்கள் எதுவுமே இல்லை எனலாம்.

ஏன்? பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் தம் விடுதலை இதழைத் தொடங்கி வைக்க அடிகளார் அவர்களையே அழைத்து வெளியிட்டார் என்றால், சமயச் சார்பில்லாதவர்களும் வணங்கிப் போற்றத் தக்க பெரியாராக அவர் விளங்கினர் என்பது நன்கு விளங்கும்.

தில்லையாடி வள்ளியம்மையார்:

(காலம்: கி. பி. 1898—1914)

"எவருடைய தியாகமும் ஆண்டவனுக்கு உகந்ததாய்ப் பயனளித்ததாய் இருந்தது என்று ஒருவரும் சொல்ல முடியாது.

ஒழுக்கமும் ஒற்றுமையும் :

போர்பற்றி வரும் புறத்திணைகளுள் வஞ்சினக் காஞ்சி என்று ஒரு துறையுண்டு. போரில் பகைவரை வெல்லாவிடில் நான் இன்ன நிலையை அடைவேன் என்று முன்னமே வீரசபதம் மேற்கொண்டு, தன் வல்லமை காட்டுவது அத்துறையாகும்.

நமது குலவீரர்கள் குழுவாகச் சேர்ந்து சபதம் செய்து, குழுவாகச் சேர்ந்து வாய்மை காத்து வான்புகழ் கொண்டு வரலாறு படைத்தனர். அதுபோலவே குடும்பமாக மேற் கொண்டு நெய்தல் தொழிலைப் புரிந்தனர்.

நூலிழைகள் ஒன்றுபட்டு உறுதியான ஆடை ஆவது போல் அனைவரும் ஒன்றுபட்டு உறுதியான சமுதாயத்தை அமைத்த சான்றோர்கள் நம்மவர்கள். சான்றாக, பழையனூர்நீலி வரலாற்றில் இத்தகைய குடிமைப் பண்பைக் காணலாம். ஒருவன் உயிர் போனால் எங்கள் எழுபது பேர் உயிர்களைத் தருகிறோம் என்று சொல்லி, சொல்லியவாறே உயிரைக்கொடுத்த வர்கள் ! வாய்மை காத்த வள்ளல்கள் !

பரிசாக ஈந்தார். புலிச்சின்னம் நவவீரர்களின் அறம் திறம்பா வீரத்திற்கும் அவர்கள் வழிவந்த செங்குந்தர் குலத்திற்கும் கிடைத்த பரிசாகும் ! விருதாகும் !!

சோழமன்னர்களுக்கும் புலிச்சின்னமே கொடிச் சின்னம் ஆகும். வீரவாகு தேவரின் மகள் சித்திரவல்லியைச் சோழன் முசுகுந்தன் மணந்துகொண்டு அங்கிவன்மனைப் பெற்ருன். வீரவாகு தேவர் புட்பகந்தியிடம் அனகன் என்ற மகனைப் பெற்ருர். புட்பகந்தி சோழமரபில் தோன்றியவள்.

அங்கிவன்மனும், அனகனும் முறையே கருவூரிலும் காஞ்சியிலும் இருந்து சோழப்பேரரசு நடத்தினர்.

எனவே, செங்குந்தர் குலம் சோழ மரபோடு இரண்டறக் கலந்து ஒரு காலத்தில் நாடாண்ட குலம் என்பதையும் இப்புலிச் சின்னம் புகட்டுகிறது. இதனை " ஈட்டி எழுபது " என்னும் நூலில் நம்குலப்புலவர் உயர் ஒட்டக் கூத்தர்.,

" கலிக்குறும் படுவள வனுக்கும் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபுஇரண் டினுக்கும் போந்ததால் "

என்று போற்றுகின்ருர்.

நமது கடமை :

சொல்லிலே பொருளைக் காண்கின்ருேம்; கல்லிலே கடவுளைக் காண்கின்ருேம்! அதுபோலவே கொடியிலே அவை உணர்த்தும் கொள்கைகளைக் காணவேண்டும். அவ்வாறு அவைகளை உணர்ந்து நமது விழாக்கள் எதுவாயினும் அவற்றின் துவக்கத்தில் கொடியேற்றி வணங்கி, குலத்திற்கு நலந்தரும் உறுதி மொழிகளை எடுத்துக்கொள்ளுதல் என்றும் ஏற்றம் தரும்.

7. கொடி காட்டும் கொள்கைகள்

நமது குலக்கொடி வெள்ளை நிறத் துணியில் நடுவே குந்தப் படையும் (ஈட்டிப்படை) அதன் வலது புறத்தில் சேவலும் இடது புறத்தில் புலியும் சின்னங்களாகக் கொண்டு விளங்குகிறது. அதனைச் செங்குந்தர்கள் உணர்ந்து சிரந்தாழ்த்தி வணங்குதல் வேண்டும்.

வெண்மை நிறம் :

வெள்ளைக் கலையுடுத்து வெண்டாமரை மலரில் வீற்றிருப்பவள் கலைமகள். வெள்ளி மலையென விளங்கும் கைலைமலையில் வெண்ணீறு அணிந்து எழுந்தருளியிருப்பவன் சிவன். கலைமகளின் அறிவையும் சிவனின் அருளையும் பெற்றவர்கள் செங்குந்தர்கள்.

வெண்மை நிறம் நேர்மையைத் தெரிவிப்பது; தூய்மையை விளக்குவது! எனவே அறிவில் தூய்மை; செய்யும் செயலில் தூய்மை; ஆன்மாவில் தூய்மை; எங்கும் எதிலும் தூய்மையாய் விளங்கும் குலமே செங்குந்தர் குலம் என்பதை வெண்மை நிறம் வெளிப்படுத்துகிறது!

குந்தப்படை :

ஈட்டி என்பதுவும் குந்தமே! வீரவாகு முதலிய நவவீரர்கள் தோன்றிய போது அவர்களுக்கு அன்னை ஆதி சக்தி கொடுத்த படையே குந்தப்படையாகும்.

குருடர் சுமக்க, அவர்மீது அமர்ந்து முடவர் வழிகாட்ட எல்லாத் தலங்களுக்கும் சென்று தெய்வத் தொண்டும் பல அற்புதங்களையும் ஆற்றினர்.

திருவாமாத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலிய நூல்களைப் படைத்துக் "கலம்பகத்திற்கு இரட்டையர்," என்ற பாராட்டும் பெற்றனர்.

நாவன்மையும் பாவன்மையும் படைத்த இவர்களது பாடல்கள் நம் குலத்தவரின் புலமைத் திறத்தை நன்கு விளக்குவனவாகும். தனிப் பாடல் திரட்டில் இவர்களது பாடல்கள் மிகுதியும் உள்ளன. சான்று :

புலவர்கள் இருவரும் புலவர்களுக்கெல்லாம் தலைவராகிய மதுரை சொக்கநாதரின் ஆலயம் சென்றனர். குருடர் அங்குள்ள பொற்றாமரைக் குளத்தில் இறங்கி ஆடையைத் துவைக்க முனைந்தபோது அது நீரில் நழுவிப் போய் விட்டது. அது கண்ட முடவர், "ஆடையை நீரில் தோய்த்து அடுத்தடுத்து அதனைத் தப்பினால் நம்மை விட்டு அது தப்பாதோ" என்று கேட்டார். அதற்குக் குருடர், "அது ஒரு கந்தைத் துணி; மேலும் அதில் ஆயிரம் கிழிசல்கள்; போனால் போகட்டும்" என்றார். இக்கேள்வியும் பதிலும் பாடல் வடிவிலே!

முடவர் அத்தோடு விட்டாரில்லை. "கிழிசல் ஆயிரம் இருந்தாலும் குளிரைத் தாங்குமே" என்ற பொருளில்,

"கண்ணா யிரமுடைய கந்தையே ஆனாலும்
தண்ணார் குளிரையது தாங்காதோ" — என்று

கேட்டார். அதற்குக் குருடரோ மதுரைச் சொக்கநாதர் அருளை நினைவூட்டும் வகையில், "இவ்வாடை போனால் என்ன? சொக்கநாதர் துணையுண்டு" என்ற பொருளில்,

" — எண்ணுதீர்
இக்கலிங்கம் போனலென் ? ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் உண்டே துணை " — என்று விடை

கூறி, நமக்கு மெய்ப் பொருளின் விளக்கம் தருகிருர்.

படிக்காசுப் புலவர் :

(காலம் : கி. பி. 17-ஆம் நூற்ருண்டு)

பொன் விளைந்த களத்தூரில் பிறந்த பெரும் புலவர்! தொண்டை மண்டல சதம் பாடிய பாவலர் !

தில்லைத் திருப்பதியில் நடராசப் பெருமானை வணங்கி அன்னை சிவகாமியை வழிபட்டபோது அன்னையின் அருளால் அன்றைய செலவிற்கு ஐந்து பொற்காசுகளைப் பஞ்சாக்கரப் படியில் பெற்றதால் "படிக்காசுப் புலவர் " என்று அழைக்கப் பட்டார்.

ஒரு சமயம் மதுரைத் திருமலைராயனல் சிறை செய்யப் பட்ட இவர், பின்னர் இவர் பாடலைக் கேட்டு அவரால் பரிசும் விருதும் பெற்ருர். தெய்வத் தலங்கள்தோறும் சென்று பாடல்களைப் பாடிய சான்ருேர் இவர். இவரது பாடல்களைத் தனிப்பாடல் திரட்டில் நிரம்பக் கண்டு நெஞ்சு மகிழலாம்.

கீழக்கரையில் பெரும் வள்ளலாய்த் திகழ்ந்த சீதக் காதியால் பெரிதும் பெருமைப் படுத்தப்பட்ட புலவர் இவர்!

இவரைப் பற்றிச் சொக்கநாதப் புலவர், " இவர் தமிழ் பாடிய ஏட்டைப் பட்டாலே மூடிவைத்தாலும் அதன் மணம் மூவுலகும் பரிமளிக்கும் ; அதனைத் தொட்டாலே கை மணக்கும் ; அதனைச் சொன்னலோ வாய் மணக்கும் ; அதனைச் சேற்றில் நட்டாலோ தமிழ்ப் பயிர் விளையும் " — என்று போற்றிப் பாடுகின்ருர்.

நூல்களையும் நம் குலப் பெருமையை விளக்கும் "ஈட்டி எழுபது" "எழுப்பெழுபது" முதலிய நூல்களையும் வழங்கியுள்ளார்.

மேலும் இவர் இயற்றியனவாகப் பற்பல பாடல்கள் தனிப் பாடல் திரட்டிலும், தமிழ் நாவலர் சரிதையிலும், தொண்டை மண்டல சதகத்திலும் காணப்படுகின்றன. விநோதரச மஞ்சரி என்ற நூலிலும் இவரைப்பற்றிய செய்திகள் வருகின்றன. அவற்றுள் பொருமையின் காரணமாக சிலர் கட்டிவிட்ட புனைந் துரைகளும் உள்ளன. காரணம், மற்றவர்கள் அழுக்காறு கொள்ளும் அளவிற்கு, இவர் வழிவழியாய் வந்த மூன்று சோழ மன்னர்கள் வணங்கத்தக்க தெய்வப் புலவராய் விளங்கியதுதான்.

சான்றுக:

தன் மாணவனும் மன்னனுமாகிய குலோத்துங்கனைச் சிறப்பிக்க எண்ணிய ஒட்டக் கூத்தர்,

'ஆடுங் கடைமணி நாவசை யாமல் அகிலமெல்லாம்
நீடுங் குடையில் தரித்த பிரான்'' — என்று

தொடங்கிப் பாடும் போது மன்னன் எழுந்து இடைமறித்து
— என்றும் நித்தநவம்

"பாடுங் கவிப்பெரு மான்ஒட்டக் கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென் றேயெனைச் சொல்லுவரே"
என்று அப் பாடலை முடித்து "ஒட்டக் கூத்தருடைய திருவடித் தாமரைகளைத் தன் திருமுடியில் சூடிக்கொள்ளும் குலோத்துங்கன்" என்று பலர் அறிய அவையில் தன் பணிவையும் பக்தியையும் வெளிப்படுத்தினான்.

இரட்டைப் புலவர்கள் :

(காலம் : 14-ஆம் நூற்றாண்டு)

இளையவர் முடவர் ! மூத்தவரோ குருடர் ! இவ்விருவரும் உடலால் ஊனமுற்று இருந்தாலும் இறைவன் அருளால் ஞானம் பெற்று விளங்கியவர்கள். அதனால் இவர்கள் முறையே இளஞ்சூரியர் என்றும் முதுசூரியர் என்றும் அழைக்கப்பட்டனர்.

8. குலச்சான்றோர்களில் சிலர்

முன்னுரை :

நம் குலம் விளங்கத் தோன்றிய சான்றோர்கள் எண்ணிலடங்கார். அவர்களுள் சிலரையாவது அவ்வப்போது எண்ணிப் பார்த்தலும் அவர் தம் எண்ணங்களை ஏற்று வணங்குதலும் நமது தலையாய கடமையாகும். நுண்மாண் நுழைபுலத்திலும் தியாகத்திலும் சிறந்து விளங்கிய செங்குந்தர் குலம் தந்த சான்றோர்களில் ஒரு சிலரது சிறு குறிப்புகளை இங்குக் காணலாம். இக் குறிப்புகளைத் தொடர்ந்து அவர்களது முழுமையான வரலாறுகளையும் படைப்புகளையும் தனித்தனி யாகப் படித்தறிதலும் பாரறியச் செய்தலும் வேண்டும்.

கவிச் சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் :

(காலம் கி. பி 12-ஆம் நூற்றுண்டு)

சைவம் வளர்த்த நாயன்மார்களில் **அப்பரடிகள்** நெடுங் காலம் வாழ்ந்து தெய்வத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றியது போல் தொண்ணூற்றேழு ஆண்டுகள் வாழ்ந்து, **விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன்** ஆகிய முப்பெரும் சோழர் களுக்கும் முத்தமிழ் போதிக்கும் குருவாய் இருந்து, தமிழக வரலாற்றில் நீங்காத இடம் பெற்றவர் **கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்** ஆவார்.

கவிராட்சதர், கவிச்சக்கரவர்த்தி, கௌடப்புலவர், **சர்வஞ்ஞ கவி** என்று பலரால் பலவாறு பாராட்டுப் பெற்ற பெரும் புலவர் ஒட்டக் கூத்தராவார்.

அவர், மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், **தக்கயாகப் பரணி, இராமாயண உத்திர காண்டம்,** முதலிய

விடுதலையான வள்ளியம்மையை, காந்தியடிகள் வந்து பார்த்து. "சிறை வாழ்விற்கு வருந்துகிருயா ?" என்று கேட்டதற்கு "நம் தன்மானத்திற்காக இன்னெரு முறையும் சிறை செல்லத் தயார்" என்று சொல்லி காந்தியடிகளின் கண்களில் கண்ணீரை மல்கச் செய்தார்.

இந்தச் சந்திப்பிற்குச் சில நாட்களுக்குப் பின்ன வள்ளியம்மையார் உயிர் நீத்தார் !

அப்போது அவருக்கு வயது பதினறே !

கொடி காத்த குமரன் :

(காலம் : கி. பி. 1904—1932)

விடுதலை வேள்வியில் வீரவாகு வழிவந்த செங்குந்தர் குலத்தோன்றல்கள் பலர் தங்கள் இன்னுயிரையும் ஈந்துள்ளனர். அவர்களுள் நம் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் செம்மலாய் விளங்குபவர் **திருப்பூர் கொடி காத்த குமரன்** ஆவார் !

காந்தியடிகள் இந்திய நாட்டு விடுதலைக்காக சட்ட மறுப்பு இயக்கம் போன்ற பல்வேறு அறப் போராட்டங்களை நடத்தினர். அப்போது, அடக்கு முறைச்சட்டங்களை அவிழ்த்து விட்ட ஆங்கில அரசு காந்தியடிகளை 1932–ஆம் ஆண்டு சிறை செய்து தன் ஆதிக்கத்தை நிலை நாட்ட முயன்றது !

ஆனல் இச்செய்தி கேட்டவுடனே இந்திய நாடு கொதித்தெழுந்தது. நாடெங்கும் கண்டன ஊர்வலங்களும் கூட்டங்களும் நடைபெற்றன.

தமிழகத்தில் **திருப்பூர்** நகரில் நெஞ்சுறுதி கொண்ட தியாக மறவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, ஆதிக்க அரசு விதித்த சட்டங்களை எல்லாம் மீறி ஊர்வலம் நடத்தினர். அவர்களுள் நம் **குமரன்** முன்னணி வீரராய் கொடி பிடித்துச் சென்ருர் !

முருகனுக்குத் துணையாய் இருந்து சூரன் முதலிய அசுரர்களை அழித்தது இப்படையே; முசுமுகனை மன்னர் மன்னனாக்கி முசுகுந்தச் சோழன் என்று உலகம் புகழ வைத்ததும் இப்படையே!

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? என்பது போல நமது ஏற்றமிகு கொடியின் நடுநாயகமாக விளங்குவது நாம் பெற்ற பேறாகும்! பேரருளாகும் !!

சேவற் சின்னம் :

முருகனது வேலுக்குத் தப்பியோடிய சூரபன்மன் கடலுக்குள் தலைகீழான **மாமரமாய்** நின்றான். அப்போதும் வேல் தப்பாது சென்று அம் மரத்தை இரு பிளவாக்கியது! அவைகளுள் ஒன்று **மயிலாகவும்** மற்றொன்று **சேவலாகவும்** வந்து முருகனை எதிர்த்தன.

முருகக்கடவுள் அருளால் மாயை நீங்கி மயிலும் சேவலும் இணங்கி வந்தன. அவற்றுள் மயிலை **வாகனமாகவும்** சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டான். கோழிச் சேவலைக் கொடியில் கொண்டதால் குமரனுக்கு "**கோழிக் கொடியோன்**" என்ற பெயரும் வந்தது.

அவரது கொடிச் சின்னம் நமது கொடியில் இருப்பது நாம் அவரது குலம் என்பதைக் காட்டவேயாகும்.

காலையில் எழுந்ததும் நாம் நம் முதல்வனை வழிபடுதல் வேண்டும். "மாமரமாய் நின்ற எங்கள் மாயையை மாய்த்த தலைவனே" — என்ற பொருளில் இன்றும் விடியற் காலையில் கோழிச் சேவல் "கொக்கு + அறு + கோ" என்று கூவி வழிபடுதலைக் கேட்கலாமே! (கொக்கு-மாமரம்; கோ-தலைவன்)

புலிச் சின்னம் :

முருகப்பெருமான் சூரனை முனிந்து கொன்றபின் அவனது கொடியாகிய **புலிக் கொடியை,** வீரவாகு தேவரின் வீரத்திற்குப்

9. தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

சங்கத் தோற்றம் :

நம் இனமக்கள் இத்தமிழகத்தில் மட்டுமின்றி இதனைச் சேர்ந்த அண்டை மாநிலங்களான **ஆந்திரம், கேரளம், மகாராட்டிரம், கர்நாடகம்** முதலிய மாநிலங்களிலும், இலங்கை, தென்னாப்பிரிக்கா, **மலேசியா,** முதலிய நாடுகளிலும் வாழ்கிறார்கள்.

இலங்கை **யாழ்ப்பாணத்தில்** மட்டும் நம் இனத்தவர் பதினைந்தாயிரம் மக்கள் பாரம்பரியப் பண்பை விடாது இன்றும் வாழ்கிறார்கள்.

இவ்வாறு, இடத்தால் வேறுபட்டுப் பிரிந்து வாழ்பவர்களை இதயத்தால் இணைத்து — குலத்தால் ஒற்றுமையை உருவாக்கி நலத்தோடு வாழ்வதற்குத் திருவாளர்கள் **காஞ்சி நாகலிங்க முனிவர்,** திருவாரூர் வள்ளல் சபாபதி முதலியார் முதலிய சான்றோர்களின் முயற்சியால் **1927**-ம் ஆண்டு **தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்** நிறுவப்பட்டது.

திருவாளர்கள் தி. செ. பழனிவேலு, காஞ்சி நகர மன்றத் தலைவர் **ம. த. சாமிநாத முதலியார், பி. செ. மாணிக்க வாசகம்** என்ற **காஞ்சி – மணிமொழியார்** முதலிய செங்குந்தர் குலச் செம்மல்கள் இச்சங்கத்தைக் கட்டிக் காத்துக் கண்ணே போல் வளர்த்தனர்.

காஞ்சி நாகலிங்க முனிவர் :

(காலம் : கி. பி. 19-ஆம் நூற்றாண்டு)

"வண்ணக் களஞ்சியம் நமது எண்ணக் களஞ்சியம்" என்று பேரறிஞர்களால் பாராட்டுப் பெற்ற வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முனிவர் தத்துவ ஞானத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்தும் தாம் பிறந்த குடியின் சிறப்பை எடுத்துரைப்பதைத் திருத்தொண்டாகக் கொண்டார்.

காஞ்சியில் பிறந்த இவர் வண்ணக்கவி பாடுவதில் சிறந்து விளங்கியதோடு, தாம் பிறந்த குலம் உயர வேண்டும் என்ற எண்ணத்தில் செங்குந்தர் சமுதாய ஒற்றுமைக்கு அவர் ஆற்றிய பணிகளுக்காக ஆண்டாண்டுக் காலம் அவருக்கு நம் குலம் நன்றி செலுத்துதல் வேண்டும்.

திருவாரூர் வள்ளல் சபாபதி முதலியாரின் பொருள் உதவியால் செங்குந்தர் குலச் செம்மையை உணர்த்தும் நூல்களையெல்லாம் ஒன்று சேர்த்து, "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு" என்ற நூலினை வெளியிட்டு நமது ஏற்றத்தை எவரும் அறிய வைத்தார்.

இப்பெரியவர் **திருத்தணிகை வண்ண மஞ்சரி, வடபழனி இரட்டை மாலை, திருவான்மியூர் புராணம்** முதலிய நூல்களை அருளியுள்ளார்.

சிறப்பாக இவரது செங்குந்தர் பிரபந்தத் திரட்டு நம் குலம் தந்த நாயன்மார்களையும், நாவலர்களையும், சில வரலாற்று உண்மைகளையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள் :

(காலம் : கி. பி. 1873—1942)

தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்ப் பணியும் தெய்வப் பணியும் ஆற்றிய அருளாளர் **தவத்திரு மெய்ஞ்ஞான சிவாச்சார்ய**

அக்காலதித்ல், திருஞான சம்பந்தர் நம்குலத்திற்கு அருள் செய்தது போல இக்காலத்தில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அருள் செய்வதற்கு அவதரித்த ஞான வள்ளலாவார்!

அவரது வாழ்க்கை வரலாற்றினையும் அவர் அருளிய நூல்களையும் நம்மவர் நாள்தோறும் படித்துப் பயன் பெறுதல் வேண்டும்; அவர் அருளுரையாற்றும் இடந்தோறும் சென்று இன்னல் தரும் வினைகளைத் தீர்த்தல் வேண்டும்.

அவரைத் தம் தவப்பயனால் ஈன்றெடுத்த **மல்லையா தாசருக்கும், கனகவல்லி** அம்மையாருக்கும் நம் வணக்கத்தை நாளும் செலுத்துதல் வேண்டும்.

முடிவுரை :

நம் குலம் தந்த சான்றோர்கள் இவ்வளவில் அடங்கினாரிலர். அவர்கள் பாலாற்று மணலினும் பலராகப் பரந்து உள்ளனர். பாமர மக்களுக்கும் பெயரளவிலாது நினைவிருக்கும் ஒரு சிலரை குறித்து மட்டுமே இங்கு எழுதப்பட்டுள்ளது.

இவர்களது வரலாற்றையும் மற்றவர்களது வரலாற்றையும் நாடறியச் செய்வது நம் குலக் கடமையாகும்! எதனையும் கடந்து எவ்வுயிரையும் தன்னுயிர் போல் கருதும் ஏற்றமிகு உணர்வை வளர்த்தலும் நம் குலக் கடமையாகும்!! அதனைத் தான் நம்மினச் சான்றோர்கள் செய்தனர் — செய்து வருகின்றனர்! இனியும் செய்வர்!

ஆனால் வள்ளியம்மையின் தியாகம் ஆண்டவனுக்கு உகந்த தாயும் பயனுடையதாகவும் இருந்தது ''—என்று நம்நாட்டுத் தந்தை **காந்தியடிகளால்** மிகவும் போற்றப்பட்டவர் **தில்லையாடி வள்ளியம்மையார்** ஆவார்.

அவர் தமிழர் இனத்துதித்த மறக்குடி மகள் என்பதோடு நம் குலப்பெண் என்பதில் நமக்த ஒரு பெருமை சேர்க்கிறது!

புதுச்சேரியைச் சேர்ந்த முனிசாமி முதலியாரும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தில்லையாடியில் பிறந்த ஜானகி அம்மையாரும் **தென்னாப்பிரிக்காவில்** இல்லறம் நடத்திச் சிறு வாணிகம் செய்து பலகாலமாக சீரும் சிறப்புடன் வாழ்ந்தனர்.

அவர்களது இல்லறத் தவப்பயனாய்ப் பிறந்தவரே வள்ளியம்மையார்!

தென்னாப்பிரிக்க நீதிமன்றம் " தென்னாப்பிரிக்காவில் இந்திய முறைப்படி நடந்த திருமணங்கள் செல்லாது '' என்று அறிவித்தது. இந்த முடிவை ஏற்றுக் கொண்டால் " என் தாய் என் தந்தைக்கு மனைவியாக மாட்டாள். நானும் முறைப்படி பிறந்த மகளாக மாட்டேன் '' என்று உள்ளம் கொதித்து எழுந்தார் வள்ளியம்மையார்!

இந்தப் புதிய தீர்ப்பினால் இந்தியர்களின் மானமே பறிபோய்விடும் என்ற நிலையில் அங்குள்ள இந்தியர்கள் எல்லாம் **சத்தியாக்கிரகப் பேரணியும்** போரும் நடத்தினர்.

இந்த அறப்போரில் வள்ளியம்மையார் சிறை செய்யப் பட்டார். சிறையில் கடும் நோய்க்கு ஆளானார். ஆனால் உள்ளம் தளர்ந்தாரில்லை. அப்போது அரசிடம் பொதுவாக ஏற்பட்ட ஓர் உடன்பாட்டின்படி வள்ளியம்மையாரும் விடுதலை செய்யப்பட்டார்! இல்லையேல் சிறையிலேயே இறந்திருப்பார்!

உச்சிமேல் கொள்ளும் புலவர்களை உலகிற்களித்த கச்சியம் பதியில் தோன்றிய **அறிஞர் அண்ணா அவர்கள்** தம் இளமைப் பருவத்திலேயே மிகச் சிறந்த பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் கொண்டு விளங்கினார்.

ஈரோட்டில் நடைபெற்ற செங்குந்தர் மாநாட்டின் ஒரு பிரிவான இளைஞர் மாநாட்டில் இவர் பேசிய கன்னிப் பேச்சினைக் கேட்ட **பெரியார் ஈ. வே. ரா.** அவர்கள் இவரை அழைத்துத் தம் இயக்கத்தோடு இணைத்துக் கொண்டார்.

தம்முடைய பேராற்றலால் மக்களைக் கவர்ந்து, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார். அப்போது, தமிழறிந்த தமிழறிஞர் என்பதற்காக வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த **புலவர் கோவிந்தனைச்** சட்டப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்கச் செய்தார்.

செய்யாறு தந்த செங்குந்தச் செம்மல் புலவர் கோவிந்தன் அவர்கள் சென்னை சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் மூலம் சங்க நூல்களைப் பற்றிய எண்ணற்ற ஆய்வு நூல்களை எழுதியும் தமிழின் சிறப்புணர்த்தும் கால்டுவெல் ஒப்பிலக் கணத்தினைத் தமிழில் மொழிபெயர்த்தும் மிகப்பெரும் தமிழ்த் தொண்டாற்றியவர் — ஆற்றி வருபவர்!

திருமுருக வாரியார் சுவாமிகள் :

தமிழின் பல்கலைக் கழகமாக — இன்றிருந்தால் சேக்கிழாரும் தம் பெரிய புராணத்தில் சேர்க்கத்தகுந்த சைவ நாயன்மாராக — நம் கண்கண்ட தெய்வமாக — சாதி, சமயம், மொழி அனைத்தும் கடந்து, அனைவராலும் போற்றப்படும் பெரியவராக – விளங்கிடும் **திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்** வடார்க்காடு மாவட்டம் காங்கேய நல்லூர் தந்த நம்குலச் செம்மலாவார்

தற்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர்—சங்கத் தமிழ்ச் செல்வர் திரு டாக்டர் சி. பால சுப்பிரமணியம் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு சங்கப் பொதுச் செயலர் பேராசிரியர் திரு. தி. ரா. செல்வராசன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சிறப்பான முறையில் "செங்குந்த மித்திரன்" திங்கள் தோறும் வெளியிடப்படுகிறது.

சங்கம் ஆற்றிய பணிகள் :

ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கி, பெண் கொடுத்து வாங்குதல் போன்ற நிலைமாறி இப்போது எவ்வித வேறுபாடும் கருதாது, எங்கும் நம் இனத்தவரிடம் பெண் கொடுத்து வாங்கும் முன்னேற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் கல்வித் துறையிலும் ஓரளவு முன்னேறியுள்ளனர்.

1938—1939-ல் நம் சமூகத்தினரைப் பிற்பட்டவர் பட்டியலில் இருந்து அரசு நீக்கியது. அப்போது நமது சங்கம் விழிப்புடன் சென்னையில் சிறப்பு மாநாடு ஒன்றினைக் கூட்டி அரசோடு தொடர்பு கொண்டு மீண்டும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தது.

1980–ஆம் ஆண்டு, பட்டியலில் உள்ள பிற்பட்ட சமூகத் தினரின் ஆண்டு வருவாயைக் கணக்கிட்டு, சலுகை காட்ட வேண்டும் என்று அரசு ஆணையிட்ட போது, நமது சங்கம் உடனே பிற்பட்டவர் மாநில மாநாடு கூட்டி, அரசினர் ஆணையைத் திரும்பப் பெறுமாறு செய்தது!

பிற்பட்டோர் சமூகத்தில் இருந்து நம்மை நீக்காதிருக்கச் சங்கம் இப்போதும் விழிப்புடனும் எழுச்சியுடனும் இருக்கிறது. இந்த வகையிலும் இன முன்னேற்றத்திலும் வடார்க்காடு

மாவட்டம் குடியேற்றம் சுதந்திரப் போராட்டத் தியாகி D. A. ஆதிமூல முதலியாரின் அருந்தவப் புதல்வர் D. A. S. பிரகாசம் I. A. S. அவர்களும் அரும்பாடுபட்டு வருகின்றார் என்பதை மறத்தற்கியலாது.

கைத்தறி மாநாடுகள் பலகண்டு, அவ்வப்போது இத் தொழிலுக்கு வரும் இன்னல்களைக் களைவதில் முனைந்து நின்றது — நிற்கிறது — நிற்கும்! திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மேதகு எஸ். பி. மணவாளன் அவர்களும் இத் தொழிலின் இன்னல்களைச் சட்டமன்றத்தில் எடுத்துப் பேசி வருகிறார்.

நம் இனச்சிறார்கள் நன்குப் படித்து முன்னேற ஊக்கப் படுத்தும் வகையில் பல உதவிகளை இயன்றளவில் செய்து வருகிறது. இதனைப் பின்பற்றி மாவட்ட—வட்டச் சங்கங்களும் செய்து வருகின்றன!

நமது நோக்கம் :

எனவே, சங்கம் எனக்கு என்ன செய்தது என்ற கேள்வியை எழுப்பாமல் சங்கத்திற்கு நாம் என்ன செய்தோம் என்பதையே ஒவ்வொரு செங்குந்தரும் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். அத்துடன் நம் வட்டத்திற்குள் மட்டுமே தம்மை இணைத்துக்கொள்ளாது, **மாவட்ட சங்கத்தையும்**, அதற்கும் மேலாக **மாநிலச் சங்கத்தையும்**, வலிவுடையதாக ஆக்குதலேஇக்குலத்துதித்த ஒவ்வொருவரின் உயிர்மூச்சாக இருத்தல் வேண்டும்!

சங்கம் வளர்ச்சி பெற நிதி உதவி செய்தலும், சங்க இதழான '**செங்குந்த மித்திரன்**' சிறப்பாக வெளிவர அதன் உறுப்பினர்கள் ஆதலும், சென்னை சேத்துப்பட்டில் உள்ள

போலீசார் திடீரென்று தாக்குதல் நடத்தினர். "நல்லுயிர் கொடுத்தும் நம் கொடியைக் காப்போம்" என்ற கொள்கை வழி நம் குமரன் மிகப்பலமான தடியடித் தாக்குதலுக்கு ஆட்பட்டுக் குருதி கொட்ட மயங்கி விழுந்த நிலையிலும் கொடியை மண்ணில் விழாது ஏந்திக் காத்தார்; மறுநாள் தன் இன்னுயிரையும் விடுதலை வேள்விக்குப் பலியாகத் தந்தார்!

நெய்யும் தொழிலுக்குச் சிறப்புற்ற சென்னிமலையில் நாச்சிமுத்து முதலியாரும் கருப்பாயி அம்மையாரும் நம்குலம் மகிழ அக்குமரனைத் தந்தனர்.

இருபத்தெட்டு வயதில் இல்லற சுகத்தையும் மறந்து இந்திய நாட்டின் விடுதலைக்கு இன்னுயிர் ஈந்த திருப்பூர்க் குமரனை இன்றைய இளைஞர்கள் என்றும் எப்போதும் எண்ணுதல் வேண்டும்.

பாவேந்தரும் பேரறிஞர் அண்ணாவும் :

பாவேந்தர் பாரதிதாசனையும் பேரறிஞர் அண்ணாவையும் அறியாதவர்கள் இன்று எவரும் இலர். இவ்விருவரும் நம்குலம் தந்த செம்மல்கள் !

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மிக உயர்ந்த மக்கள் ஒருமைப் பாட்டுக் கொள்கை வழி சாதி, சமயங் கடந்த சான்றோர்களாய் விளங்கியவர்கள் இவர்கள்.

"நமக்கொரு வால்டேரும் ஷெல்லியும் கிடைத்து விட்டார் அவர் நம்மோடு நமக்காக நம் வேலையைச் செய்கிறார்" என்று அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்ற புரட்சிக்கவிஞர்-பாவேந்தர் பாரதிதாசன் புதுவையில் நம் குலத்துதித்து — கவிதையில், கருத்தில் புரட்சியை ஏற்படுத்திய பாரதியின் தாசனாகி ஆயிரக் கணக்கில் கவிதைகளைத் தந்து அகிலம் புகழப் பாரதியின் புகழையும் மங்காது விளங்கச் செய்தவர்.

1929-ஆம் ஆண்டு முதல் செங்குந்தர் மாநாடுகள் ஆங்காங்கு நடைபெற்றன. பல்வேறு மாவட்டத்தைச் சேர்ந்த தலைவர்களும் பிற இனச்சான்றோர்களும் இம்மாநாடுகளில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த குடியேற்றம் முன்னாள் நகர மன்றத் தலைவர்கள் திரு. M. A. வேலாயுத முதலியார் திரு. மா. வெ. பீமராஜ முதலியார் குடியேற்றம் முன்னாள் நகர் மன்றத் தலைவரும் இராசேசுவரி நூற்பாலை இயக்குநருமாகிய திரு M. G. அமிர்தலிங்க முதலியார் முதலியோர் சங்க மாநாடுகளில் பங்கேற்றுச் சிறப்பித்துள்ளனர்.

பெரியவர் சண்முகனார் :

திருப்பத்தூர் முன்னாள் நகரமன்றத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் குடியேற்றத்தில் திருமகள் நூற்பாலையை உருவாக்கி வளர்த்தவரும் பெரும் கவிஞருமாய் விளங்கியவருமான **பெரியவர். கா. அ. சண்முக** முதலியார் அவர்கள் சங்க ஆரம்ப காலத்திலிருந்து ஆற்றிய அருந் தொண்டுகளை யாரும் மறத்தற்கியலாது.

திருப்பத்தூர், ஆதியூரைச் சேர்ந்தவரும் **"செங்குந்தர் புராணம்"** எழுதியவருமாகிய திரு. **ஆ. குமாரசுவாமி முதலியார்** இவரது ஆசிரியர் ஆவார்.

திருவாரூர் வள்ளல் சபாபதி முதலியார் அவர்களோடு இணைந்து, சங்கத்திற்கென்று தனிக்கட்டிடம், சென்னைச் சேத்துப் பட்டில் நமக்கென **" வள்ளலார் மாணவரில்லம் "** கட்ட நிலம் வாங்குதல் முதலிய பெருந்தொண்டுகளுக்கு உறுதுணையாய் இருந்தார். மேலும் சங்கத்தின் தலைவராகவும் பல்லாண்டுகள் இருந்து பலர் போற்றத் தொண்டாற்றியுள்ளார்.

தற்போது நமது சங்கத்தின் தலைவராக, கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ எம். பி. நாச்சிமுத்து முதலியார் அவர்கள் இருந்து நம்குலப்பணியை நன்காற்றி வருகின்றார்.

பெரியவர் - கவிஞர் - பேரறிஞர்

திருப்பத்தூர்

கா. அ. சண்முக முதலியாரின்

நூற்றாண்டு நினைவிற்கு

எங்கள்

நெஞ்சார்ந்த

நன்றியினைத்

தெரிவித்துக்

கொள்கிறோம்.

இவண்,

வேதாந்தத் தமிழ் வாசகசாலை,

திருமகள் கல்விச் செல்வம்,

குடியேற்றம்.

❋

திரு. **வெ. மு. வாசுதேவ முதலியார்,**

தலைவர்.

திரு. **பு. சு. சிவஞானம்,**

செயலர்.

சங்கப் பிரச்சாரகர்கள் :

சங்க ஆரம்ப காலத்தில் திருவாளர்கள் கல்யாணம் பூண்டி குமரகுரு முதலியார், தேவகோட்டை வால சுப்ரமணிய முதலியார், தி. அ. சண்முக முதலியார், மாயவரம் சா. கு. பா. பழனிவேல் முதலியார், காஞ்சி மா. அ. கனகசபை முதலியார், காஞ்சி மணிமொழியார் முதலிய சான்றோர்கள் சங்கப் பிரச்சார கர்களாக இருந்து நம்இனத்தவர் இருக்குமிடமெல்லாம் சென்று அனைவரையும்ஒன்றுபடுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுபோலவே, ஒவ்வொரு வட்ட, மாவட்ட அளவிலும் சங்கம் நிறுவப்பெற்று பல தலைவர்கள் பொறுப்பேற்று இன ஒற்றுமைக்கும் உயர்விற்கும் பாடுபட்டு வந்தனர்; வருகின்றனர்; வருவர். தற்போது வடார்க்காடு மாவட்டத்தில் ஆரணி திரு. புலவர் கோ. இளைய பெருமாள் சங்கப் பிரச்சாரகராகத் தொண்டாற்றுகிறார்.

இதுவரை நடைபெற்றுள்ள சங்க மாநாட்டு மலர்களிலும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க பொன்விழா அறிக்கையிலும் (1981–ல் வெளியிடப்பட்டது) அச்சான்றோர்களைப் பற்றிய விவரங்களை நன்கறியலாம். சுருக்கம் நோக்கி, பலருடைய பெயர்களைக் குறிப்பிட முடியவில்லை.

செங்குந்த மித்திரன்

நமது குல வரலாறுகளையும் நாம் ஆற்ற வேண்டிய கடமைகளையும் மையமாகக் கொண்டு "செங்குந்த மித்திரன்" இதழ் 1927–ஆம் ஆண்டு காஞ்சி நாகலிங்க முனிவரை ஆசிரியராகக் கொண்டு துவங்கப் பெற்றது. பின்னர், காஞ்சி மா. சண்முகசுந்தர முதலியாரும், காஞ்சி மணி மொழியாரும், சென்னை C. நடராச முதலியாரும், தி. செ. பழனிவேல் முதலியாரும் ஆசிரியர் பொறுப் பேற்று இதழைச் செவ்வனே இடைவிடாது வெளியிட்டு வந்தனர்!

— என்ருன். அக் கொள்கையை உடைய நமது செங்குந்தர் மாநாடுகளில் பெரியார் ஈ. வே. ரா; மாண்பு மிகு சி. சுப்பிரமணியம்; பெருந்திரு மா. பொ. சிவஞானம்; கவியரசு கண்ணதாசன்; சொல்லின் செல்வர் ஈ. வி. கே. சம்பத்; மாண்பு மிகு மைய அமைச்சர் ப. சிதம்பரம்; மாண்பு மிகு தமிழக அமைச்சர் க. ராஜாராம்; மதுரைச் செல்வர் ப. நெடுமாறன் முதலிய பெருஞ்சான்ருேர்களும் பிற மாநிலத்தைச் சேர்ந்த பெருந் தலைவர்களும் நமது சங்க மாநாடுகள் போன்றவற்றில் கலந்து கொண்டு, பாராட்டி மகிழ்ந்து வாழ்த்தியுள்ளனர் என்பதை எவரும் எப்போதும் எண்ணுதல் வேண்டும்.

செங்குந்தர் குலம் வாழ்க!

செகமெலாம் செழித்து வாழ்க !!

Sri

Grams : 'THIRUMAGAL'

Phone :

Managing Director	426
General Manager	26
Office	52

THIRUMAGAL MILLS LIMITED

Fine Cotton Spinners

Registered Office :

Post Box No. 1, Katpadi Road,

GUDIYATTAM - 632 602.

Estd. – in 1937

Managing Directors :

Thiru M. ETHURAJAN

Thiru V. R. VENKATACHALAM

Leading Manufacturers of Counts from 20s to 80s
both in Hanks and Cones
60s Carded & Combed/Warp Quality and Doubled Yarn

GOLDEN JUBILEE YEAR

1937 — 1987